சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 15.03.2024 SC.129/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பாண்டி | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

**அ.சா.2**

---

முதல் விசாரணை

நான் கூடலூர் தம்மணப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு நான் மாங்காய் தோப்புக்கு மருந்து அடித்துவிட்டு வந்து கொண்டிருந்தேன். அப்போது சண்டை நடந்து கொண்டிருந்தது. நானும் மணியும் சேர்ந்து விலக்கிவிட்டோம். ஏன் சண்டை போட்டீர்கள் என்று நல்லதம்பியை பார்த்து கேட்டேன். அப்போது நல்லதம்பி வீட்டு விசயமாக தகராறு செய்தார்கள் என்று சொன்னார். கம்பம் அரசு மருத்துவமனைக்கு நானும் நல்லதம்பியுடன் சென்றேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

<u>குறுக்கு விசாரணை</u>

நல்லதம்பி சொல்லித்தான் எனக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியும். சண்டை நடந்ததை நான் நேரடியாகப் பார்க்கவில்லை. நான் அப்போது தோப்பில் இருந்தேன். என்னிடம் போலிசார் தனிப்பட்ட முறையில் வாக்குமூலம் எதுவும் வாங்கிக்கொள்ளவில்லை.